சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**MCOP.No.23/2024**

மனுதாரர் தரப்பு சாட்சி ம.சா.1 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. J. சரஸ்வதி, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

பெயர்: திரு. மதன்ராஜ் த/பெ: மாறன்

வயது: ஊர் :

தொழில்: முகவரி:

தேதி: 16.07.2025 தாலுக்கா :

**முதல் விசாரணை...**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

| வ. எண் | நாள் | ஆவணவிபரம் | ஆவணத் தன்மை | |
|---|---|---|---|---|
| 1 | 29.08.2023 | முதல் தகவல் அறிக்கை | கணிணி பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.1 |
| 2 | 29.08.2023 | விபத்து பதிவேடு அறிக்கை | கணிணி பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.2 |
| 3 | 04.09.2000 | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஆர்.சி. புக் | கணிணி பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.3 |
| 4 | 31.05.2023 | 2ம் எதிர்மனுதாரர் நிறுவன காப்பீடு பாலிசி | கணிணி பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.4 |
| 5 | 07.01.2004 | 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் உரிமம் | கணிணி பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.5 |
| 6 | 01.09.2023 | 1ம் எதிர்மனுதாரரின் வாகன எம்.வி.ரிப்போர்ட் | கணிணி பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.6 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | 11.09.2023 | திருவாரூர் மெடிக்கல் சென்டர் தனியார் மருத்துவமனையில் மனுதாரர் சிகிச்சை பெற்றதற்கான டிஸ்சார்ஜ் சம்மரி | அசல் | ம.சா.ஆ.7 |
| 8 | 11.09.2023 | தனியார் மருத்துவமனை கட்டண பில் | அசல் | ம.சா.ஆ.8 |
| 9 | -- | எனது ஆதார் அட்டை (அசலுடன் சரிபார்க்கப்பட்டது அசலை திரும்ப பெற்றுக்கொண்டேன்) | நகல் | ம.சா.ஆ.9 |
| 10 | -- | எனது வங்கி பாஸ் புத்தகம் | நகல் | ம.சா.ஆ.10 |
| 11 | -- | மெடிக்கோ லீகல் ஒப்பீனியன் | கணிணி பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.11 |
| 12 | -- | திருவாரூர் மெடிக்கல் சென்டர் தனியார் மருத்துவமனையில் மருந்து வாங்கியதற்கான பில்கள் (எண்ணிக்கை - 21) ரூ.13,760.34/- | அசல் | ம.சா.ஆ.12 |

மனுப்படி உத்தரவிட வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இருச்சக்கர வாகனத்தில் பயணம் செய்தேன் என்றால் சரிதான். இருச்சக்கர வாகனத்தில் நான் மட்டும் தான் சென்றேன். இருச்சக்கர வாகனத்தில் சென்ற போது நான் ஹெல்மெட் அணியவில்லை என்றால் சரியல்ல. நான் ஹெல்மெட் போட்டிருந்தேன். எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. நான் வெல்டர் தொழில் செய்து வருகிறேன் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் வெல்டிங் வேலைக்கு செல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல. மாதம் எனக்கு ரூ.20,000/- வருமானம் வருவதாக மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இருச்சக்கர வாகனத்தில் சென்ற போது நான் சாலை ஓரத்தில் இருந்த ஜல்லியில் வாகனத்தை விட்டதால் எனக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மனுவில் சொல்லியுள்ளவாறு டிப்பர் லாரியால் எனக்கு விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் ஓட்டிச் சென்ற வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனத்தை தரப்பினராக

சேர்க்கவில்லை என்பதால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே மனுப்படி பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றாலும் அது தற்போது முழுமையாக குணமாகிவிட்டது என்றாலும் சரியல்ல. எனக்கு பகுதி ஊனமோ நிரந்தர ஊனமோ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. மனுவில் மிகைப்படுத்தி நஷ்ட ஈட்டை கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணமே நான் தான் என்பதால் மனுப்படி எனக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.